**உடனடியான பகிர்வுக்கு: ஒக்டோபர் 9, 2019**

**மேலதிகத் தகவல்களுக்கு, பின்வருவோரை தொடர்பு கொள்ளவும்:**

**வாஷிங்டன் தொடர்பு நபர்:**
கிளைட்டன் மெக்லெஸ்கி, தொலைபேசி: +1 202-728-5429, மின்னஞ்சல்: cmccleskey@ndi.org

## NDI/NRI என்பவற்றின் இணைந்த தேர்தலுக்கு முன்னரான கண்காணிப்பு பணிக்குழு இலங்கையில் எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரான தனது பரிந்துரைகளை வெளியிடுகின்றது

கொழும்பு, இலங்கை - இன்றைய நாள், சர்வதே குடியரசு நிலையம் (IRI) மற்றும் தேசிய ஜனநாயக நிலையம் (NDI) என்பவற்றின் இலங்கைக்கான சர்வதேச தேர்தலுக்கு முன்னரான மதிப்பீட்டுத் தூதுக்குழு இலங்கையில் எதிர்வரும் நவம்பர் 16 அன்று இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமது கண்டறிதல்கள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய கூற்றினை வெளியிட்டுள்ளது. குறித்த கூற்றானது சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலும் வெளிவந்துள்ளது.

கடந்த செப்டம்பர் 30 தொடக்கம் ஒக்டோபர் 4 2019 வரை தூதுக்குழு அரசியல் வரிசையில் காணப்படும் கட்சிப் பிரதிநிதிகள், தேர்தல் ஆணைக்குழு, பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், குடிமக்கள் தேர்தல் கண்காணிப்பாளர் குழுக்களின் தலைவர்கள் உள்ளிட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள், பெண் அரசியல் செயற்பாட்டாளர்கள், ஊடகங்கள் தொடர்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச மற்றும் இராஜதந்திர சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரை சந்தித்தது. இந்தச் சந்திப்புகள் மற்றும் கள அவதானங்கள் என்பவற்றின் அடிப்படையில் தூதுக்குழுவின் கூற்றானது வெளிப்படைத் தன்மையான, பாதுகாப்பான நம்பகத்தன்மை வாய்ந்த தேர்தலை நடத்துதல் மற்றும் இந்தத் தொடர் செயன்முறையில் பொதுமக்களின் நம்பிக்கையைக் கட்டி எழுப்புதல் என்பவற்றை மேம்படுத்த உதவும் பரிந்துரைகளை வழங்குகின்றது.

முக்கியமான பரிந்துரைகளில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்குகின்றன:

- **ஊடகப் பக்கச்சார்பு:** தேர்தல் ஆணைக்குழுவானது ஊடகத்தை – அச்சு, ஒளிபரப்பு மற்றும் சமூக – மற்றும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் பிரச்சாரத்தின் பொழுது பயன்படுத்தும் மேம்படுத்தும் ஆவணங்களை பொறுப்பு மிக்க வகையில் மற்றும் ஒழுக்கத்துடன் பயன்படுத்துவதற்கான உறுதியான வழிகாட்டல்களை பிரசித்தப்படுத்த வேண்டும். அரச மற்றும் தனியார் துறை ஊடகங்கள் இவ்வழிகாட்டல்களை, விசேடமாக

அனைத்து வேட்பாளர்களுக்கும் பக்கச் சார்பற்ற சமத்துவம் மிக்க ஊடகப் பிரசித்தத்தை வழங்குவது தொடர்பில், பின்பற்றியொழுக வேண்டும். ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து பாராளுமன்றம் தேர்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல்களுக்கான அணுகல் என்பனவற்றைப் பாதுகாத்துக் கொண்டு தனியார் ஊடகங்களில் மேற்கொள்ளப்படும் வெறுப்புப் பேச்சு, தவறான மற்றும் பிழையான தகவல்களைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டவாக்கம் ஒன்றினைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

- **பிரச்சார நிதி:** தேர்தல் தொடர் செயன்முறையின் வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல் மற்றும் குடிமக்களை அதிக தகவலறிந்த தெரிவுகளை மேற்கொள்ள வலுப்படுத்தல் என்பவற்றுக்காக ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் தாம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் வெளிப்படுத்தல்களை பிரசித்தமாக்க வேண்டும். நீண்ட கால அடிப்படையில் பாராளுமன்றம் பிரச்சார நிதி மட்டுப்படுத்தல்கள், அறிக்கையிடல் மற்றும் வெளிநாட்டு பங்களிப்பு தொடர்பான பிரச்சினைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.
- **வாக்காளர் அறிவு:** தேர்தல் ஆணைக்குழு, அரசியல் கட்சிகள், ஊடகங்கள் மற்றும் சிவில் சமூகம் என்பன வாக்காளர் அறிவு முன்னெடுப்புகளை, விசேடமாக விருப்பு வாக்கு முறை மற்றும் வாக்குச் சீட்டு குறியிடல் என்பவை தொடர்பில், அதிகரிக்க வேண்டும். பெண்கள், கிராமப்புறங்களில் வாழும் இளைஞர்கள் மற்றும் குடிமக்களை நோக்கி இலக்கு வைக்கப்பட்ட வாக்காளர் அறிவுப் பிரச்சாரம் அதிகரிக்கப்பட வேணடும். இவ்வாக்காளர் அறிவானது ஒவ்வொரு குடிமகனினதும் வாக்கின் முக்கியத்துவம், தேர்தல் பிணக்குத் தீர்த்தல் பொறிமுறைகளுக்கான அணுகல் மற்றும் இயலாமை கொண்ட நபர்களுக்கான அணுகல் மற்றும் உள்ளடக்கல் போன்ற விடயங்களில் கவனக் குவிவு கொண்டதாக அமைய வேண்டும்.
- **நடத்தைக் கோவை:** இலங்கையின் அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவினால் இலகுபடுத்தப்பட்டு அமுல்படுத்தப்படும், சிறந்த நடவடிக்கைகளைக் கொண்ட, சாத்தியமான வன்முறைகளைத் தடுக்க உதவுகின்ற அத்துடன் தவறான தகவல்கள், பிழையான தகவல்கள் மற்றும் வெறுப்புப் பேச்சு என்பவற்றின் பரவலைத் தடுக்க உதவுகின்ற பல தரப்பு நடைமுறைக் கோவை ஒன்றினைப் பின்பற்ற தன்னார்வமாக ஒத்துக் கொள்ள வேண்டும்.

இப்பரிந்துரைகளாவன தேர்தலுக்கு முன்னர் இலங்கை எதிர்நோக்குகின்ற விருப்பத்தெரிவு வாக்களிப்பு முறை பற்றிய புரிதல் தொடர்பான கரிசனைகள், பெண்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் முழுமையான பங்குபற்றலில் காணப்படும் தடைகள், பக்கச்சார்பு மிக்க ஊடகப் பிரசித்தம் மற்றும் பிரச்சார நிதிக்கட்டுப்பாட்டு சட்டங்கள் இன்மை போன்ற முக்கிய சவால்களை தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளனவாகும்.

தூதுக்குழுவின் தலைவரும் முன்னாள் தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளருமான உயர்ஸ்தானிகர் கார்ல் இன்டெர்பேர்த் கருத்துத் தெரிவிக்கையில் "முக்கியத்துவம் வாய்ந்த தேசியத் தேர்தல் ஒன்றினை இலங்கை எதிர்நோக்கியுள்ளது. இத்தேர்தலானது நாட்டின் எதிர்கால ஜனநாயகப் பாதையை தீர்மானிக்கக் கூடியதாக அமையக் கூடும்" எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் "இலங்கை பல ஆண்டுகளாக அடைய முயற்சித்துக் கொண்டிருக்கும் ஒற்றுமையினை அச்சுறுத்தும் வகையில் கடந்த 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் அமைந்திருந்தன. இத்தேர்தலானது பன்மைத்துவம் மற்றும் சமாதானம் மிக்க சகவாழ்வு என்பவற்றின் மீதான நாட்டின் கடப்பாட்டை மீள வலியுறுத்தும் வாய்ப்பாக அமைந்துள்ளது. நாட்டின் அடிப்படையான சமாதானம் பாதுகாப்பு என்பனவற்றுக்கு இனங்களின் ஒற்றுமை முக்கியமானதாகும்" எனத் தெரிவித்தார்.

முன்னாள் அமெரிக்க இராஜாங்க அரசியல் மற்றும் இராணுவ விவகாரங்களுக்கான பிரதி உதவிச் செயலாளரும் தூதுக்குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவருமான காரா பூ கருத்துத் தெரிவிக்கையில் "இலங்கை முன்னேறிச் செல்லவும் பன்மைத்துவத்தை மீள வலியுறுத்தவும்

இத்தேர்தலானது தனித்துவம் மிக்க வாய்ப்பை வழங்குகின்றது அத்துடன் சமாதானம் மற்றும் முன்னேற்றம் என்பவற்றுக்கு பல்வகைத்தன்மை அத்தியாவசியமானது'' எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் ''பெண்கள் அரசியல் தலைமைத்துவ பதவிகளில் உள்வாங்கப்படும் வகையில் எதிர்காலத் தேர்தல்கள் மேலதிக வாய்ப்புகளை வழங்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்'' எனத் தெரிவித்தார்.

IRI மற்றும் NDI என்பன இப்பணியை சர்வதேச தேர்தல் கண்காணிப்பு கொள்கைகள் பிரகடனம் என்பதற்கு அமைவாக மேற்கொண்டதோடு இலங்கையின் மக்களே தமது தேர்தல்களின் நம்பகத்தன்மை மற்றும் சட்டரீதியான தன்மை என்பனவற்றை மற்றும் தமது நாட்டின் ஜனநாயக அபிவிருத்தி என்பனவற்றை தீர்மானிப்பர் என ஏற்றுக் கொள்கின்றது.

உயர்ஸ்தானிகர் இன்டெர்பேர்த் மற்றும் செல்வி பூ ஆகியோருடன் மலேசிய பாராளுமன்ற உறுப்பினரான மரியா சின் அப்துல்லா, இந்தியாவின் முன்னாள் தேர்தல் ஆணையாளர் திரு. S.Y. குறைஷி, NDI அமைப்பின் ஆசிய பசுபிக் பிராந்தியங்களுக்கான பிராந்தியப் பணிப்பாளர் மன்பிரீத் சிங் ஆனந் மற்றும் IRI அமைப்பின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான பிரதித் தலைவர், ஸ்கொட் மாஸ்டிக் ஆகியோர் இத்தூதுக் குழுவில் அங்கம் வகித்திருந்தனர்.

இந்த ஊடக அறிக்கையை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நோக்கவும்.

###

***தேசிய ஜனநாயக நிலையம்*** *(NDI) என்பது குடிமக்கள் பங்கேற்பு, திறந்த தன்மை மற்றும் அசாங்கத்தின் பொறுப்புக்கூறும்தன்மை ஊடாக ஜனநாயக அமைப்புகளை வலுப்படுத்த மற்றும் அவற்றுக்கு ஆதரவளிக்க உலகளாவிய ரீதியில் பணிபுரியும் இலாபநோக்கற்ற, பக்கச்சார்பற்ற மற்றும் சுயாதீனமான நிறுவனமாகும்*
*நிறுவனம் பற்றிய மேலதிக தகவல்களை* www.ndi.org *எனற இணைய இணைப்பின் மூலம் பெறலாம்*

***சர்வதேச குடியரசு நிலையம்*** *(IRI) என்பது அரசியல் கட்சிகளுக்கு அவை மிகவும் பதில் வழங்கக் கூடியனவாக மாறுவதற்கு உதவுதல், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறும் ஆட்சி, அத்துடன் பெண்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளிட்ட ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் வகிபாகங்களை அதிகரிக்க பாடுபடல் என்பவற்றின் ஊடாக சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் என்பவற்றை முன்னேற்றப் பாடுபடும் இலாப நோக்கற்ற மற்றும் பக்கச் சார்பற்ற நிறுவனமாகும்.*
*நிறுவனம் பற்றிய மேலதிக தகவல்களை* www.iri.org *எனற இணைய இணைப்பின் மூலம் பெறலாம்*